

கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளைப் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில், எழும்பூர் தொகுதியில் ஆறாவது நிகழ்வாக, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலையில் அமைந்துள்ள சர்வோதயா மாணவிகள் இல்லத்தில் 26.11.2024 அன்று நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அம்மாணவிகளுக்கு அறுசுவை இரவு உணவும், அவ்வில்லத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்களையும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.

# மீனாட்சி மகளிர் கல்லூரி ‘நிறுவனர் நாள்’ விழா!

## பேராசிரியர் மா. செல்வராசன் உரையாற்றுகின்றார்!

சென்னை,டிச.3-

சென்னை கோடம்பாக்கம் ஆர்க்காடு சாலையில் உள்ள மீனாட்சி மகளிர் கல்லூரியை 1975 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த

அரசாணையின் படி நிறுவியவர் பேராசிரியர் கே.ஆர். சுந்தரராசன். மேலும் இந்தியப் பொறியியல் நிறுவனம், மீனாட்சி சுந்தரராசன் பொறியியல் கல்லூரி, மீனாட்சி சுந்தரராசன் மேலாண்மை யியல் நிறுவனம் ஆகிய கல்வி நிலையங்களை உருவாக்கியவர். இவர் பிறந்தநாள் நிகழ்ச்சியாக நிறுவனர் நாள் விழா 03122024 செவ்வாய்க் கிழமை முற்பகல் 1100 மணிக்குக் கல்லூரி கே.ஆர். எசு அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில், சென்னைப் பல்கலைக்கழக இக்கால இலக்கியத் துறை மேனாள் பேராசிரியர் தலைவர்,சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர் முனைவர் மா.செல்வராசன் கலந்து கொண்டு வருவாய் குறைந்த குடும்பங்களில் இருந்து படிக்கும் எண்பத்தைந்து (85 மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகைகள் வழங்கி நிறுவனர் நாள் உரை நிகழ்த்த உள்ளார்.

விழாவிற்குக் கல்லூரித் தாளாளர் செயலர் மேனாள் முதல்வர் முனைவர் கே. எசு இலட்சுமி அவர்கள் தலைமை தாங்குவார்.

## மீட்பு – நிவாரணப் பணிகள் தீவிரம்!

# புயலுக்கு முன்னரே அமைதி காண விழையும் அரசு!

## தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச. 3 -

ஃபெஞ்சல் புயலால் கடும் மழை இருந்த போதும் மீட்பு - நிவாரணப் பணிகளை அரசு முடுக்கி விட்டது. புயலுக்கு முன்னரே அமைதி காண விழையும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 2.11.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

வடகிழக்கு பருவமழைக் காலம் என்றாலே, தமிழக மக்களுக்கு ஒருவித கிலி கடந்த 10 ஆண்டு காலத்தில் ஏற்பட்டு விட்டது. இக்காலத்தில் உருவாகும் புயலும், மழை வெள்ளமும் சில சமயங்களில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடுவதுண்டு. அதிலும் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தானே மற்றும் வர்தா புயல்கள் சென்னை மக்களை சிதறடித்தது. கடந்த 2015 மற்றும் 2016ம் ஆண்டு புயலின் போது சுமார் 20 மணி நேரம் மழை கொட்டித் தீர்த்ததால், சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பலத்த சேதத்திற்கு உள்ளாயின. நூற்று க் கணக்கான மரங்கள் முறிந்து விழுந்ததோடு, இயல்பு வாழ்க்கை திரும்பவே ஒரு மாதம் ஆனது. அலட்சியத்திற்கு பேர் போன அ.தி.மு.க. அரசும், புயல் காலங்களில் வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் நிவாரணம் பெயரில் பல உருட்டல்களை நடத்தியது. கஜா புயலிலும் இதே கதைதான்.

கடந்தாண்டும் புயல், வெள்ளத்தில் சென்னை மட்டுமின்றி, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் பெரிய பாதிப்புக்குள்ளாயின. ஆனால் அரசும், அரசு இயந்திரங்களும் செயல்பட்ட விதம், நடப்பது திராவிட மாடல் ஆட்சி என்பதை மக்களுக்கு அடிக்கடி நினைவூட்டின. வெள்ளம் புகுந்த இடங்களில் உடனடியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டதோடு, துரித கதியில் மீட்பு பணிகளும் நடந்தேறின. இவ்வாண்டும் வடகிழக்கு பருவமழை காலத்தில் தற்போது உருவான ஃபெஞ்சல் புயல் மாமல்லபுரத்தில் இருந்து 50 கி.மீ. தொலைவில் நகர்ந்து புதுச்சேரி அருகே கரையை கடந்தது. இப்புயல் உருவான நாளில் இருந்தே சென்னையும், புதுவையும் அதோ கதிதான், தமிழகமே தத்தளிக்க போகிறது என்கிற மாதிரியான அச்சுறுத்தல்கள் சமூக வலை தளங்களில் பரவின. அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் அதற்கு தூபமிட்டன. ஆனால் மக்கள் நலன் நாடும் திராவிட மாடல் அரசு புயலையும், வெள்ளத்தையும் எதிர்கொள்ள அனைத்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளையும் முன்பே எடுத்திருந்தது.

சென்னையின் பல்வேறு இடங்களில் அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக மழைநீர் தேங்கா


தினகரன்
டிசம்பர் 2, 2024 திங்கட்கிழமை
புயலுக்கு முன் அமைதி

மல், தண்ணீர் வெளியேறிய வண்ணமே இருந்தது. சென்னைக்கு வெள்ளப்பாதிப்பும் குறைவாகவே இருந்தது. மழை வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான விழுப்புரம் மாவட்டத்திற்கு மின்சாரத் துறை மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர்களை உடனடியாக அனுப்பி வைத்தார் முதல்வர். தொடர்ந்து துணை முதல்வரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். வெள்ள பாதிப்புகளை தடுக்க தயார் நிலையில் இருந்த மூத்த அதிகாரிகள் குழுவும் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு உடனடியாக விரைந்தது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஒன்றிய வானிலை அறிக்கைகள் சரிவர இருப்பதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சென்னையில் உள்ள தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள் கணித்த அளவுக்கு கூட, ஒன்றிய அரசின் பெஞ்சல் புயல் கணிப்புகள் சரிவர இல்லை. எத்தனையோ புயல், வெள்ளத்தை எதிர்கொண்டுள்ள சென்னை மாநகரம், இம்முறை பெஞ்சல் புயலை அசால்டாக எதிர்கொண்டது என்பதே உண்மை. இதைக் காண பொறுக்காமல் அ.தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சியினர், சென்னையின் பழைய வெள்ள காட்சிகளை பதிவிட்டு, தங்களுக்கு தாங்களே ஆறுதல் தேடிக் கொண்டனர். கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மீட்பு நடவடிக்கைகளிலும், அதை தொடர்ந்து நிவாரண பணிகளையும் இப்போதே அரசு முடுக்கி விட்டுள்ளது. பொதுவாக புயலுக்கு பின்னே அமைதி என்பார்கள். ஆனால் இப்போது புயலுக்கு முன்னரே அமைதியை காண விழைகிறது திராவிட மாடல் அரசு.


இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது..



கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் வட்டக் கழக செயலாளர் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏற்பாட்டில் 1000 பொது மக்களுக்கு காலை சிற்றுண்டி நேதாஜி நகர் நேதாஜி சிலை அருகில் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியை கேக் வெட்டி காலை உணவை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆகியோர் வழங்கினர்.உடன் வட்ட கழக செயலாளர்கள் எஸ். எல்.சுந்தர், ஜி. ஏழுமலை, சசிகுமார், கி.தேவன், எம்.விமலா, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், கோவிந்தராஜ், மீஞ்சூர் முகுந்தன், ஜான்கென்னடி, கே. ஜானகிராமன், கே.சி.ராஜா, எம்.முருகேசன், எஸ். ராஜா, கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.எஸ். கிருஷ்ணன். நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கவிஞர் முடியரசன்**
**டிசம்பர் 3 (1998)**



**திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.**

**கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.**

**“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.**

**தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நான் உள்ள வந்தா என்னப்பா?

## ‘கணையாழி’ தலையங்கம்!




உள்ளே வந்தா என்னப்பா என்று
உறுமிக் கொண்டு வந்த
காற்றழுத்தத் தாழ்வு மண்டலப் புயல்
கரையைக் கடந்திருக்கிறது.

கனமழையைத் தாங்காமல்
காம்பொடிந்து கிடக்கின்றன
அடைமழையில் குடை விரிக்கும்
காளான்கள்!

சேதாரம் அதிகம் இல்லாமல்
மக்களைக் காப்பாற்றியிருக்கிறது
முதலமைச்சரின் நிருவாகம்!

ஆனால் கரையில்
மன அழுத்தத் தாழ்வு மண்டலத்தை
உருவாக்கி இருக்கிறது
இசைவாணியின்
உள்ள வந்தால் என்னப்பா!

வைக்கம் நுழைவுப் போராட்டம் நடத்தி
வெற்றி கண்ட மாநிலத்தில்
எந்தச் சாதியாக இருந்தாலும்
உள்ளே வரக் கூடாது என்று
பெண்களுக்குத் தடை!

சபரிமலைக்குப் போகப்
பெண்களுக்குத் தடை இல்லை என்று
உச்ச நீதிமன்றமே 2018 இல்
அனுமதி தந்திருந்த போதும்
இப்போதும்
ஐயப்பனின் பக்தர்கள்
அனுமதிக்க மறுக்கிறார்கள்!

அரசமைப்புச் சட்ட நாளில்
சபரிமலைக்குப் போக வந்த
துருபதி தேசாய்
போராட்டக்காரர்களால்
விமான நிலையத்திலேயே
தடுத்து நிறுத்தப்பட்டார்!
பிறகு வந்த 10 பெண்கள்
திருப்பி அனுப்பப்பட்டனர்!

அதையும் மீறி உள்ளே சென்ற
பிந்து அம்மினி, கனக துர்கா
தாக்கப்பட்டனர்!
பிந்து அம்மினிக்கு
மிளகாய்ப்பொடி இரசாயன அபிஷேகம்!
ஆட்டோவில் வந்து தாக்கியதில்
அவருக்குப் பல் உடைந்தது.
இவ்வளவுக்கும் அவர்
சட்டக் கல்லூரி விரிவுரையாளர்
ஆனாலும் என்ன
அவர் ஒரு தலித் இல்லையா?

மாநிலம் முழுதும் போராட்டம்
இரண்டு பேர் உயிர் போனது!

கனக துர்காவையும்
விட்டுவைக்கவில்லை.
பத்துநாள் போலிஸ் பாதுகாப்பு!
பாதுகாப்பு முடிந்து
நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
வீட்டுக்குப் போனால்
மாமியாரால் தாக்கப்பட்டார்!
காயத்தோடு மருத்துவமனைக்குப்
போனவர்
திரும்பி வந்தால்
உள்ளே வராதே என்று
சபரிமலையாய்க் கணவனின் அதிகாரம்!

நீதிமன்றம் சென்று தீர்ப்பு வாங்கி
வீட்டுக்குத் திரும்பினால்
வீட்டைக் காலி செய்துவிட்டு
கணவனும் மாமியாரும்
கனக துர்காவின் இரட்டைக்
குழந்தைகளுடன்
தலைமறைவாகி இருந்தனர்.
இவ்வளவுக்கும் கனக துர்கா
அரசுத்துறை பணியில் இருக்கிறார் !

நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
ஆறு வருடங்களுக்கும் முன்
இசைவாணி எழுப்பிய கேள்விக்கு
இப்போதும் பதில் சொல்ல முடியாமல்
பாட்டையும்
பாடியவரையும் பழிதீர்க்க நிற்கிறார்கள்!

இவ்வளவுக்கும்
ஐயப்பன் வேறு யாருமில்லை
பாதி உடம்பைப்
பார்வதிக்குத் தந்து

மாதொரு பாகராக இருக்கிற
பரமசிவனின் மகன்!
பரமசிவனின் பாதியாக இருக்கிற
பார்வதிதேவியின் வளர்ப்பு மகன்!

கங்கை எனும் பெண்ணைத்
தலையில் வைத்துக் கொண்டாடும்
பரமசிவனின் மகனை வணங்கப்
பெண்களுக்கு உரிமை இல்லையா?
நான் உள்ள வந்தா என்னப்பா என்று
பாட்டில் கேள்வி கேட்டிருக்கிறார்
இசைவாணி!

இந்தக் கேள்விக்கு
இடமில்லை தமிழகத்தில்
ஏனெனில்
கோயிலுக்குள் வர மட்டுமில்லை
ஓதுவாராகவும் அர்ச்சகராகவும்
பெண்களுக்கு
உரிமை அளித்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!
ஆம்!
அனைத்து சாதியினரும்
அர்ச்சகராக ஓராண்டுப்பயிற்சி!

சென்னை, மதுரை
திருவரங்கம், திருவண்ணாமலை
திருச்செந்தூர், பழனி என்று
ஆறு இடங்களில் பயிற்சி மையம்!
ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களுக்கும்
ஆன்மீகத்தில் பயிற்சி!

பயிற்சி பெற்ற பெண்களுக்கு
முன்னுரிமை அடிப்படையில்
பணிநியமனம் வழங்கி
முன் மாதிரியை உருவாக்கி இருக்கிறார்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

விமானம் ஓட்ட
விண்வெளிக்குச் செல்ல
ஆண்களைப் போலப் பெண்கள்
அணிவகுத்து நிற்கிறார்கள்.
ஆனால்
அவர்களைப் போல முடியுமா
ஆண்களால் உயிர் சுமக்க!

அதனால்தான்
முதல்வர் ஆணையிட்டிருக்கிறார்
“கருவைச் சுமக்கும் பெண்கள்
இனி
கருவறைக்குள்!”
ஆகவே
இந்தியா முழுதும் செல்லட்டும்
அந்தத் தமிழ் முழக்கம்
**“நான்
உள்ள வந்தால் என்னப்பா?”**

- நன்றி
**கணையாழி!**
டிசம்பர் - 2024



**ம.ரா.**

## புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் ‘மாபெரும் மிஸ்டர் தமிழ்நாடு ஆணழகன்’ போட்டி!

## மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

மாதவரம்,டிச.3-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு,மிஸ்டர் தமிழ்நாடு ஆணழகன் போட்டி, 19 வது வட்டம் மாத்தூர் பிரவீன் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை வட பெரும்பாக்கம் ஆர். எம். டி .ஜிம் உரிமையாளர் திரு மோகன்ராஜ் ஒருங்கிணைத்து செய்திருந்தார்.

19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற போட்டியில்,தமிழ்நாடு அளவிலான இந்த போட்டியில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், திண்டிவனம், திருவண்ணாமலை,கோயமுத்தூர், மதுரை, திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்து ஆணழகர்கள் கலந்து கொண்டு போட்டியில் கலந்து கொண்டார்கள்.

எடை வாரியாக நடைபெற்ற இந்த போட்டிகளில் 40 கிலோ முதல் 85 கிலோ வரையிலான மொத்தம் 142 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டார்கள்.

தனித்தனி பிரிவாக நடைபெற்ற போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு மற்றும் ஆறுதல் பரிசு பெற்ற வீரர்களுக்கு பரிசு கோப்பைகளும், சான்றிதழ்களும் மெடல்களும் அணிவிக்கப்பட்டன.

மொத்தம் ஒன்பது பிரிவுகளில் இப்போட்டி நடைபெற்றது. இறுதியாக அனைத்து எடை பிரிவுகளிலும் வெற்றி பெற்ற முதல் பரிசு பெற்ற வீரர்களுக்கான ஒட்டுமொத்த மிஸ்டர் தமிழ்நாடு போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் திருவண்ணா மலையைச் சேர்ந்த புவியரசு முதல் பரிசை தட்டிச் சென்றார். இரண்டாம் பரிசை பெரம்பூரைச் சேர்ந்த சதீஷ்குமார் தட்டிச் சென்றார்.

இந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் விளையாட்டு சைக்கிள் ஒட்டுமொத்த பரிசாக மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே. ஏழுமலை, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஜெயராஜ், மாவட்ட பிரதிநிதி பி .நிர்மல் குமார்,மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சின்ன மாத்தூர் மணிகண்டன், எம். என், அஜய் தென்னவன், பேன்சி ரமேஷ், துரைதசரதன், துரைசாமி, சரவணன், திருமலை, துளசி, கோவர்தனன்,ஹரி சுப்பிரமணி, கதிரவன், சின்ன மாத்தூர் குகன், நாகராஜ் ,காசி, மாத்தூர் குமார் ஐசிஎப், சிவப்பிரகாசம், சோமு, தமிழரசன், கங்காதரன், ராஜேஷ் கண்ணன், சுரேஷ், ஜானகிராமன் முகமது முஸ்தபா, சாந்தகுமார், மலர் மன்னன், கஸ்தூரி சரஸ்வதி, பெரிய நாயகி, கலைச்செல்வி, அத்திகுளம் தேவி, சுந்தரி, விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார், எஸ். சிவக்குமார், கே. சண்முக பிரியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நேஷனல் ஆர்மச்சூர் பாடி பில்டர்ஸ் அசோசியேஷன் செயலாளர் ஏ. அமீர் பாஷா, தலைவர் ஆர். பரசுராமன், பொருளாளர் வி. மனோகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் சிறப்பாக நடுவர்களாக செயல்பட்டு போட்டியை நடத்திக் கொடுத்தார்கள் .

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், மிஸ்டர் தமிழ்நாடு ஆணழகன் போட்டி மாத்தூர் 19வது வட்டத்தில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கி வாழ்த்தினார். மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,எஸ். உதயகுமார், எம்.என்.அஜய் தென்னவன், ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா, சிவராமன், விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். ஆர்.எம்.டி. உடற்பயிற்சி கூட மேலாண்மை இயக்குனர் மோகன்ராஜ் முன்னிலையில் போட்டி பெற்றது.